செய்தி வெளியீடு எண்.09 நாள்.13.01.2021

# பத்திரிக்கை செய்தி

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) அம்பத்தூர்**

**16.01.2021 வரை நேரடி சேர்க்கை நாள் நீட்டிப்பு**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் (மகளிர்) அம்பத்தூர் சென்னை – 600 098ல் ஜனவரி 16 (16.01.2021) வரை நேரடி சேர்க்கை நடக்கிறது. வேலை நாட்களில் தினமும் காலை10.00 மணி முதல் மாலை 5.00 வரை பெறப்படும் விண்ணப்பங்களின்படி சேர்ககை நடக்கும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண்கள் விண்ணப்பிக்கலாம் வயது வரம்பு இல்லை பயிற்சி அளிக்கப்படும் தொழிற்பிரிவுகள் விவரம் கீழே வழங்கப்பட்டுள்ளது. பயிற்சியில் சேருவோருக்கு மாத உதவித்தொகை ரூ.750, இலவச பஸ் பாஸ், மிதிவண்டி மடிக்கணினி, பாடப்புத்தகங்கள் வரைபடக்கருவிகள், இரு செட் சீருடை, மூடுகாலணி மற்றும் சிறந்த தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. விண்ணபதாரர்கள் 10-ம் வகுப்பு கல்வி சான்றிதழ், மாற்று சான்றிதழ், சாதி சான்றிதழ், ஆதார் அட்டை, பாஸ்போர்டு அளவு புகைப்படம் ஆகியவற்றை எடுத்து வர வேண்டும்.

| வ.எண். | தொழிற் பிரிவுகள் | பயிற்சி காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | கம்மியர் கருவிகள் | 2 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | கோபா | 1 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | கட்டிடப்பட வரைவாளர் | 2 வருடம் | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 4. | தையல் தொழில் நுட்பம் | 1 வருடம் | 8ம் வகுப்பு தேர்ச்சி |

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**